**நாவலப்பிட்டிய நகர சபை - 2024**

-----------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நாவலப்பிட்டிய நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181 (1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவலப்பிட்டிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாடு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுகள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரைஷ |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் வங்கிக்கு கிடைத்த கிடைத்திருந்த ரூபா 736,000 தொகையான அனுப்புகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அனுப்பிகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் தயாரிக்க ஐந்தொகையில் பொது களஞ்சிய கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த மீதி அட்டவணையுடன் ஒப்பிடும் போது ரூபா 566,217 ஆன வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் உரிய அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 12,770,525 ஆன 08 சொத்துக்களுக்குரிய பதிவேடுகள் அட்டவணைகள் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், கோவைகள் போன்றவை சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படும் என்பதாக. | ஒவ்வொரு கணக்கு மீதிகளையும் உறுதிப் படுத்துவதற்குரிய பதிவேடுகள் கோவைகள் மற்றும் அட்டவணைகள் பேணி செல்லப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **பாராளுமன்ற சட்டங்கள் 1987 இன் 18 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்)** | | | |
| | 72(1) மற்றும் 72(4) | மீளாய்வாண்டில் சபையினால் இனங் காணப்பட்டிருந்த அத்துமீறிய 06 நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும் உள்ளதாக. | அத்துமீறிய நிர்மானங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | முற்பணம் ஒன்று அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவுற்ற உடனே தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2016 இலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 126,532 ஆன 03 முற்பணங்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செயற்பாடு நிறைவு பெற்ற உடனே முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டும. |
| (ii) | நிதிப் பிரமாணம் 571(3) | 2016 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான காலப் பகுதிக்குரிய காலாவதியான ரூபா 2,778,645 ஆன 58 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | - மேற்படி – | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 1988 மே 07 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க | வீத வரி அறவீட்டிற்காக சபை அதிகார பிரதேசத்தில் அனைத்து | மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் விலை மதிப்பீட்டு | 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | அசையாத ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் இறுதியாக மதிப்பீடு செய்த மதிப்பீடு செய்து 15 ஆண்டுகள் கடந்திருந்த போதும் 2024 ஆம் ஆண்டுக்காகவும் 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு நகர சபையால் வீதவரி அறவிடப்பட்டு இருந்தது. | திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | மதிப்பீடு செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,466,349 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,102,142 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 15,261,500 | 14,871,800 | 13,848,229 | 18,855,298 | 14,422,500 | 14,280,765 | 14,453,260 | 17,831,727 |
| (ii) | வாடகை | 50,344,500 | 64,139,754 | 37,529,317 | 168,297,025 | 47,679,000 | 47,677,525 | 25,780,445 | 141,686,588 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,050,000 | 1,428,485 | 1,411,385 | 912,070 | 875,000 | 1,336,250 | 1,336,250 | 894,970 |
| (iv) | ஏனைய வருமானம் | 23,310,000 | 43,870,704 | 37,357,356 | 27,234,668 | 8,850,000 | 9,597,300 | 8,128,564 | 20,721,319 |
| | | 89,966,000 | 124,310,743 | 90,146,287 | 215,299,061 | 71,826,500 | 72,891,840 | 49,698,519 | 181,134,604 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 18,855,298 ஆக இருந்ததுடன் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக காணப்படும் 39 அலகுகளில் இருந்து ரூபா 6,846,167 தொகை நிலுவையாக இருந்ததுடன். 1987 இன் 18 ஆம் இலக்க நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 170 ஆம் பிரிவின் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். .நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(ஆ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு குத்தகை வாடகை நிலுவை ரூபா 166,491,203ஆக இருந்ததுடன் அந்நிலுவையில் 2019 ஆம் ஆண்டு முதல் மீச்சந்தை கட்டிடத் தொகுதிக்காக ரூபா 122,249,932 தொகையும் பொது கடைகளுக்காக ரூபா 38,635,097 என மொத்தம் ரூபா 160,885,029 ஆன நிலுவை ஒன்று நிலுவை மீதி ஒன்று இருந்தது. | எதிர்காலத்தில் நிலுவை கட்டணங்களை அளவிடுவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 762,162 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 15,989,400 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மேற்படி. | எதிர்காலத்தில் நிலுவை கட்டணங்களை அளவிடுவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | **அறிவித்தல் பதாதைகள்** | | |
| | 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/07 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவன (நிறைவேற்றப்பட்ட உபஉறுப்புரை) சட்டத்தின் 39.1.2 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அளவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டு வரை 159 நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 894,470 ஆன அறிவித்தல் பதாகை கட்டணங்களை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) **முச்சக்கர வண்டி கட்டண அறவீடு**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முச்சக்கர வண்டிகள், வேன் வண்டிகள் மற்றும் லொரி வண்டிகள் போன்ற 31 நிறுத்துமிடங் களிலிருந்து ரூபா 7,901,944 ஆன நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அந்நிலுவையில் ஒரு 01 ஆண்டுக்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குரிய ரூபா 2,842,458 தொகை மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 3,855,705 தொகையான நிலுவையும் இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அளவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 20 ஆந் திகதி கெப் ஒன்று விபத்துக்கு உட்பட்ட காரணத்தினால் ரூபா 103,500 ஆன நட்டமொன்று இடம்பெற்று இருந்ததாக 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த நி.பி 104(3) பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் நி.பி 104(4) பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பொறுப்பான தரப்பினரை இனங் காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 104(4) பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | நி.பி 104(4) பரிசோதனையை விரைவில் பூர்த்தி செய்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | .2020 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 915,003 ஆன 03 கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் கொடுத்தோர் மீதிகள் தேர்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020.'.06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் மிகை நிதியை சபைக்குரிய வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்களில், சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது | செயற்திட்டங்களுக்காக மிகை பணம் அவ்விருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படுவதாக. | மிகை பணத்தை சுற்றறிக்கை பிரகாரம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 17,996,995 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப் பட்டிருந்ததுடன் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 41,436,300 தொகையும் விளைவற்ற வகையில் காணப்பட்டது. | | |
| (இ) | 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235∴54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை ஐ ஆம் பகுதியின் 83.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 88 கட்டிடங்களுக் காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | பரீட்சித்து எதிர்வரும் காலங்களில் இணக்கச் சான்றிதழ் வழங்குவதாக. | இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டு முதல் அறுவிடப்பட வேண்டிய விளையாட்டரங்கு கட்டணம் ரூபா 1,535,820 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | உரிய கட்டணங்களை அறபடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அளவிடப்பட வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டிற்காக இனங் காணப்பட்ட வீதவரி முறைகேடு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நி.பி 104(4) இறுதி அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக. | நிதியத்திற்கு ஏற்படுத்திய நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான மொத்தம் ரூபா 2,782,750 பெறுமதியான 9 உழவு இயந்திர டேலர்கள் 10 ஆண்டுகள் காலமாக விளைவற்று அல்லது குறை பயன்பாடுடன் காணப்பட்டன. | எதிர்வரும் காலங்களில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | கைதவிர்ப்புச் செயற்பாடு செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 14 பதவிகளில் 29 வெற்றிடங்களும் பதவியொன்றில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 06 ஆக காணப்பட்டன. | :உள்ளூராட்சி மன்ற திணைக் களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது சேவைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |